1517

# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 08 | குடியியற்கல்வி<br>சுட்டெண் : ............................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

• **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. மலேரியா நோயை முற்றாக இல்லாதொழித்த நாடாக இலங்கையைப் பிரகடனஞ் செய்த சர்வதேச அமைப்பு
   1) ஐக்கிய நாடுகள் தாபனம் 2) யுனிசெவ்
   3) யுனெஸ்கோ 4) உலக சுகாதார தாபனம்

2. இலங்கைப் போக்குவரத்துச் சபை மூலம் கிராமப் பிரதேசங்களுக்கு நடைமுறைப்படுத்தப் படுகின்ற விசேட போக்குவரத்துச் சேவை
   1) சிசுசெரிய 2) கெமிசெரிய 3) விசுசெரிய 4) கமசெரிய

3. அதிக கோபத்துக்குள்ளாகின்ற நபரொருவரின் உடல் வெளிப்பாடுகளாக இனங்காணக் கூடியவை
   1) பேச்சுத்திக்குதல், பல்லைக் கடித்தல் 2) கைதட்டுதல், துள்ளிக் குதித்தல்
   3) கூக்குரலிடல், கண்கள் விரிதல் 4) அழுகை, ஒப்பாரி வைத்தல்

4. ஜனநாயகத் தலைமைத்துவப் பண்புகளில் ஒன்று
   1) மாற்றத்தை விரும்பாமை
   2) மக்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளலும், மதித்தலும்
   3) ஊழல், மோசடி, துஸ்பிரயோகங்களில் ஈடுபடல்
   4) தம்மை முன்னேற்றுவதற்கு முயற்சித்தல்

5. இலங்கைக்கு பௌத்தமதத்தை அறிமுகப்படுத்திய மகிந்ததேரரும், குழுவினரும் வருகைதந்த தினத்தை நினைவுகூர்ந்து கொண்டாடப்படும் விழா
   1) வெசாக் 2)பொசன்தினம் 3) எசல 4) ரம்zான்

6. பல்பண்பாட்டுச் சமூகங்களில் வாழும் பிரஜைகள் பின்பற்ற வேண்டிய குணவியல்பு
   1) ஏனையோரின் கொள்கைகள், கருத்துக்களுக்குச் செவிமடுக்காமை
   2) அனைத்து இன மக்களுக்கும் மதிப்பளிக்காமை
   3) தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றுதல்
   4) எந்தவொரு இனத்தையும் உயர்வானதாகக் கருதுதல்

7. உலகிலுள்ள பல்பண்பாட்டுச் சமூகங்களைக் கொண்ட நாடுகளில் இந்தியா சிறப்பான இடத்தினை வகிப்பதற்கான காரணம்
   1) இந்தியா மதச்சார்பற்ற நாடாக இருத்தல்
   2) பல்பண்பாட்டு மக்கள் சமூகம் வாழ்தல்
   3) அபிவிருத்தியில் முன்னேறி வருகின்ற நாடாக இருத்தல்
   4) மிகப்பெரிய ஜனநாயக நாடாகக் காணப்படுகின்றமை

8. இலங்கையில் வாழும் பெரும்பான்மையின மக்கள் சமூகம்
   1) முஸ்லீம் 2) பறங்கியர் 3) சிங்களவர் 4) தமிழர்


9. புவியினுள் நிகழும் பௌதிகச் செயற்பாடுகளால் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்கள்
   1) வெள்ளம், புயல் 2) சூறாவளி, காட்டுத்தீ
   3) சுனாமி, புவிநடுக்கம் 4) மண்சரிவு, வரட்சி


kalvi.lk

10. 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இலங்கையில் கரையோரப் பிரதேசங்களில் பாரிய அழிவை ஏற்படுத்திய அனர்த்தம்
1) வரட்சி 2) சுனாமி 3) சூறாவளி 4) வெள்ளம்

11. அவசரத் தேவைகளின்போது தீயணைப்புப்படை மற்றும் நோயாளிகள் காவு வாகன சேவையைப் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்
1) 1959 2) 110 3) 1991 4) 119

12. அருகே தரப்பட்டுள்ள வீதிக்குறியீடுகள் வெளிப்படுத்தும் விடயங்கள் முறையே





1) போக்குவரத்திற்குத் தடை, புகையிரத நிலையம்
2) பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை, முன்னால் நிறுத்து
3) முன்னால் வழிவிடவும், முன்னால் நிறுத்து
4) முன்னால் பாதுகாப்புடைய புகையிரதக் கடவை, முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை

13. இலங்கையின் உலர்வலயத்தில் பரவி வருகின்ற சிறுநீரகப் பிரச்சினைக்குக் காரணமான இரசாயனப் பதார்த்தம்
1) சயனைற் 2) சல்பைற் 3) கிளைக்கோசிக் 4) கல்சியம் காபனேற்

14. இயற்கையின் அடிப்படைச் செயற்பாடுகளாவன
1) உருவாக்கம், நிலைபேறு, அழிவு 2) நீக்குதல், மீள்பாவனை, மீள் சுழற்சி
3) தரம் பிரித்தல், மீள் சுழற்சி, மீள்பாவனை 4) நிலைபேறு, நீக்குதல், உருவாக்குதல்

15. மின்குமிழைக் கண்டுபிடித்து உலகிற்கு ஒளியூட்டிய விஞ்ஞானி
1) மார்க்கோணி 2) தோமஸ் அல்வா எடிசன்
3) வில்லியம் ஹார்வே 4) ஐசாக் நியூட்டன்

Educational கல்வி අධ්‍යාපන

16. மாணவர் முகங்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சினை
1) தான் விரும்பியது கிடைத்தல்
2) பாதுகாப்பும், பராமரிப்பும் கிடைத்தல்
3) பாடசாலைச் சூழலில் ஏற்படும் மன உளைச்சல்
4) பரீட்சைகளில் சித்தி பெறுதல்

17. பின்வரும் தொழில்களில் வெள்ளைக் கழுத்துப்பட்டி வேலையினுள் உள்ளடங்குவது
1) விவசாயி 2) கணக்காளர் 3) மீனவர் 4) மேசன்

18. தமக்குரிய வேலையை மகிழ்ச்சியுடனும் விருப்பத்துடனும் செய்வது
1) தியாகம் 2) திறமை 3) அர்ப்பணிப்பு 4) மனிதநேயம்

19. ஊழியர் ஒருவர் தம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டிய பண்புகள் அல்லாதது
1) குழு மனப்பாங்குடன் செயற்படல்
2) நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தல்
3) தனித்துச் செயற்படுதல்
4) சிறந்த ஆளிடைத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளல்

20. பின்வருவனவற்றுள் விசேடமான தொழிற்பயிற்சி தேவைப்படுகின்ற தொழில்கள்
1) ஆசிரியர், விவசாயம், சாரதி
2) மீன்பிடி, நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர்
3) கொழுந்தெடுத்தல், விவசாயம், மீன்பிடி
4) விமானமோட்டுதல், விண்வெளிப்பயணம், சத்திரசிகிச்சை செய்தல்

(2×20=40 புள்ளி)

பகுதி - II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) 1. மூன்றாம் தவணையில் குடியியற் கல்விப் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகையைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
2. மேற்படி கணிப்பீட்டை மேற்கொண்ட பாடஅலகு யாது? (02 புள்ளிகள்)
3. அக்கணிப்பீட்டினைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்திய நான்கு தரஉள்ளீட்டுப் பொருட்களை எழுதுக. (04 புள்ளிகள்)
4. அக்கணிப்பீட்டைப் பூர்த்தி செய்தமையால் பெற்றுக்கொண்ட நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

02) 1. மக்களுக்குப் பொதுச்சேவைகளை வழங்கும் நிறுவனங்களை அவை வழங்கும் சேவையின் தன்மையினை அடிப்படையாகக்கொண்டு வகைப்படுத்துக.
2. பொதுச் சேவைகளின் மூன்று பண்புகளைக் குறிப்பிடுக.
3. கல்விச்சேவை மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் பணிகளில் மூன்றினைத் தருக.
4. மின்சார சேவையைப் பயன்படுத்தும் பிரஜைகளினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் மூன்று தருக.

(3×4=12 புள்ளி)

03) 1. குடும்பம் ஒன்றில் காணக்கூடிய ஜனநாயகப் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. கல்வியைப் பெற்றுக்கொள்ளும் உரிமை கொண்ட சிறுவர்களுக்கு கற்றல் தொடர்பாகக் காணப்படுகின்ற கடமைகள் மூன்று தருக.
3. சிறுவர் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் பாதுகாப்பதற்கும் எனத் தொழிற்படுகின்ற நிறுவனங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
4. பாதகமான மனவெழுச்சிகளை சமநிலைப்படுத்துவதற்கு ஈடுபடக்கூடிய ஆக்கச் செயற்பாடுகள் மூன்றினை எழுதுக.

(3×4=12 புள்ளி)

04) 1. பல்பண்பாடு கொண்ட நாடொன்றாகப் பரிணமிப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா பின்பற்றுகின்ற செயற்பாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.
2. பல்பாண்பாட்டுச் சமூகத்தைக் கொண்ட நாடொன்றில் வாழும் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படும்போது ஏற்படுகின்ற அனுகூலங்கள் மூன்று எழுதுக.
3. பல்பண்பாட்டுச் சமூகங்களில் வாழும் பிரசைகள் பின்பற்ற வேண்டிய குணவியல்புகள் மூன்று தருக.
4. ஜனநாயக வாழ்வுடன் தொடர்புடைய பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக.

(3×4=12 புள்ளி)

05) 1. வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு சாரதிகளின் தவறுகள் காரணமாகும் சந்தர்ப்பங்கள் மூன்று குறிப்பிடுக.
2. இடிமின்னல் தாக்குதல்களால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக்கொள்ள மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் மூன்று தருக.
3. வரட்சி காரணமாக ஏற்படுகின்ற விளைவுகள் மூன்று குறிப்பிடுக.
4. நிலைத்து நிற்கும் அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு பிரஜைகளாகிய நாம் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் மூன்று தருக.

(3×4=12 புள்ளி)

06) 1. நாம் தினசரி வாழ்வில் எதிர்நோக்கும் மூன்று சவால்களைக் குறிப்பிடுக.
2. இலங்கையில் பின்வரும் உற்பத்திகளுக்குப் பிரபல்யமான இடங்களைப் பெயரிடுக.
   i) முகமூடி, பொம்மலாட்டக் கைப்பணி
   ii) களிமண் சார்ந்த உற்பத்திகள்
   iii) பிரம்புசார் உற்பத்திப் பொருட்கள்
3. தொழில் செய்பவர் தொழிற்பற்றுடன் செயற்படுவதன் காரணமாகக் கிடைக்கும் பயன்கள் மூன்று குறிப்பிடுக.
4. இலங்கையில் வேலை உலகை வெற்றி கொள்வதற்கான பயிற்சிகளை வழங்கும் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூன்று தருக.

(3×4=12 புள்ளி)

kalvi.lk

kalvi.lk


2025
1ம் தவணை வகுப்புகள்
தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
ஆரம்பம் 01.01.2025
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.
அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...
Education கல்வி
Kalvi.lk
Whatsapp
075 287 1457